

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தேனி தெற்கு மாவட்டம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த எம்.ஜெயக்குமார் தி.மு.க.வில் இணைந்தார். அதுபோது கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களை, அவரது இல்லத்தில், மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன், க.சுந்தர், இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### தினமும் கொலை, கொள்ளைச் சம்பவங்களை வேடிக்கை பார்ப்பதேன்?

# கதாநாயக சாகசங்களைக் காட்ட - முதல்வர் திட்டமா?

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, செப். 11-

நாள்தோறும் நடந்து வரும் கொலை கொள்ளைச் சம்பவங்களை முதல்வர் ஜோசப் விஜய் வேடிக்கை பார்ப்பதை பார்க்கும் போது, ஏதேனும் கதாநாயக சாகசங்களை காட்ட அவர் திட்டமிட்டிருக்கிறாரோ என்கிற குழப்பம் மக்களிடையே எழுவதாக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



இது தொடர்பாக அவரது பதிவு வருமாறு:-

தலைநகர் சென்னையில் மீண்டும் ஒரு கொலை! இப்படி நாள்தோறும் தொடரும் கொலை கொள்ளை சம்பவங்களால் ஒரு சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்கள், தான் ஒரு முன்னாள் கதாநாயகன் என்பதால், வணிகத் திரைப்படங்களில் காட்டப்படுவதைப் போல, முதலில் கொடூரக் கொலைகள் அரங்கேறுவதை வேடிக்கை பார்த்துவிட்டு, பின்னர் தனது 'கதாநாயக சாகசங்களை' காட்டலாம் என்று ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறாரா என்ற குழப்பமும் மக்களிடையே எழுகிறது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பதிவிட்டுள்ளார்.



இடைத்தேர்தல் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மதுராந்தகம் தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், தாராபுரம் தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் ஐ.சுகன்யா ஆகியோர் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆகியோரை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின் போது திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் பத்மநாபன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பி. அப்துல் மாலிக் ஆகியோர் உடன் இருந்தனர்.

### தி.மு.க. வேட்பாளர்கள் இ.பரந்தாமன் – திருமதி எஸ்.சுகன்யா

# ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ.வுடன் சந்திப்பு!


சென்னை, செப்.11-

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளராக வழக்கறிஞர் பரந்தாமன், திருமதி. S.சுகன்யா ஆகியோர்நேற்று ம.ஜ.க. தலைமையகம் வந்தனர்.

ம.ஜ.க. தலைமையகம் வந்த அவர்களை, தலைவர் மு.தமிமுன் அன்சாரி அவர்கள் வரவேற்றார்.

ம.ஜ.க. சார்பில் தேர்தல் பணி குழுக்களை அமைக்க இருப்பதாகவும், தானும் பரப்புரைக்கு வருவதாகவும் கூறினார். அவர்களுடன் தி.மு.க. இளைஞரணி துணைச் செயலாளர் கல்பாக்கம் பா.அப்துல் மாலிக், தி.மு.க.வின் திருப்பூர் (கிழக்கு) மாவட்ட செயலாளர் பத்மநாபன் ஆகியோரும் உடன் வந்திருந்தனர்.

இந்நிகழ்வில் இக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர்கள் நாகை முபாரக், கலைக்குயில் இப்ராஹிம், மாநில துணைச் செயலாளர்கள் அரிமா. அஸாருதீன், S.M.நாசர், தாம்பரம் தாரிக், கொள்கை விளக்க அணி மாநில செயலாளர் பஷீர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அபுதாஹிர், மத்திய சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் காஜா, வடசென்னை மத்திய மாவட்டச் செயலாளர் அஜ்மல் ஆகியோர் உடன் இருந்தனர்.



கழக துணைப் பொதுச் செயலாளரும் – நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களை, அவரது இல்லத்தில், மதுராந்தகம் தொகுதி இடைத் தேர்தலில் கழகக் கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக் உள்ளார்.



மனித நேய ஜனநாயகக் கட்சித் தலைவர் மு.தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. அவர்களை மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் இ.பரந்தாமன், திருமதி எஸ்.சுகன்யா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் சட்டமன்ற தனி தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் தி.மு.க. வேட்பாளர் இ.பரந்தாமன் அறிமுக கூட்டம் மதுராந்தகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட செயலாளர்கள் க.சுந்தர், தா.மோ. அன்பரசன் ஆகியோர் வேட்பாளர் பரந்தாமனை அறிமுகம் செய்து வைத்தனர் அருகில் காஞ்சிபுரம் செல்வம் எம்.பி. உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.